# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au
info@tsch.org.au


**பேச்சுப்போட்டி 2022** **ஆண்டு ஐந்து**

அனைவருக்கும் வணக்கம்

## உண்மை பேசுவோம்

காலம் மாறினாலும் என்றும் உறுதியானது, முக்கியமானது உண்மை பேசுதல் ஆகும். உண்மை உயர்வானது. ஒருவரைச் சான்றோன் ஆக்குவது. மகிழ்ச்சி, சிறப்பு, வெற்றி, அன்பு, நம்பிக்கை, ஆளுமை போன்ற சிறப்பியல்புகளைக் தருவது உண்மை.

நாம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டுமானால் உண்மை பேசிப் பழக வேண்டும். "பொய் சொல்லக் கூடாது பாப்பா" என்று மகாகவி பாரதியார் எமக்காகப் பாடியுள்ளார்.

உண்மை பேசும் போது பல துன்பங்களைச் சந்திக்க நேரும். ஆனாலும் போட்டி, பொறாமை, கர்வம் இல்லாது உண்மை பேசி வாழவேண்டும். என்றும் உண்மையே வெல்லும் என்பதை உணரவேண்டும். உண்மை பேசினால் குடும்பம், உற்றார், உறவினர், நண்பர்கள், சமூகம், நாடு, உலகம் முழுவதும் உன்னத நிலையை அடையலாம். உண்மை பேசி அழியாப் புகழ் பெற்றவர் மகாத்மா காந்தி.

"வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றும்
 தீமை இலாத சொலல்" என்றார் வள்ளுவர்.

அவர் கூற்றின் படி உண்மை என்றால் மற்றவர்களுக்குச் சிறிதும் தீமை தராத சொற்களைக் கூறுதலாகும். நாமும் உண்மை பேசி உயர்வோம்.

நன்றி
வணக்கம்